பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்:6 பிரமோதூதஹூ மாசி ௴ 29 உ புதன்கிழமை (13-03-1991) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:106

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 13

நேற்றுக்காலை பலாலியிலிருந்து தொண்டமானாறு நோக்கி பத்துக்கும் அதிகமான ஆட்லறி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன. ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. [உ]

## மூவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

பருத்தித்துறை கடல் பகுதியில் இருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடத்தப்பட்ட 50 கலிபர் தாக்குத

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வவுனியாப் பகுதியில் மோதல், குண்டு வீச்சு!

## 3 பொதுமக்கள் பலி; நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 13

வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் நேற்றுப் பரவலாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. குண்டு வீச்சுக்கு இலக்காகி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உயிரிழந்தனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

இதற்கிடையில் வவுனியாவில் நேற்று மோதல்கள் இடம்பெற்றதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் வவுனியாவில் நேற்று நேருக்கு நேர் மோதிக்கொண்டதாகவும் பி. பி. ஸி தெரிவித்தது.

நேற்றுப் பகல் வவுனியாவில் ஸ்ரீலங்காப் படையினரால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

நேற்றுக் காலை 8 மணியளவில் வவுனியா – தேவகுளம் பகுதியில் இரு பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர்.

புதுக்குளம் கொத்தணி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ப. நோ. கூ. சங்கங்களில் பொருள்களுக்கு புதிய விலை

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்களில் விற்பனையாகும் அத்தியாவசியப் பொருள்களுக்கு புதிய விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

யாழ். தேஙிய கூட்டுறவுச் சபையின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் புதிய விலைகள் நிர்ணயம் பற்றி அறிவிக்கப்பட்டது

நாளை மறுதினம் [வெள்ளி] முதல் புதிய விலைகள் அமுலுக்கு வருகின்றன.

விலை நிர்ணயம் செய்யப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மடு அகதி முகாமுக்கு ஐ. நா. மீண்டும் உணவு

யாழ்ப்பாணம், மார்ச் 13

மடு அகதி முகாமுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் நேற்று கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன. சுமார் ஒரு வார இடைவெளியின் பின்னர் ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் நேற்றே அங்கு பொருள்களை அனுப்பியது.

இதற்கிடையில் —

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய இலங்கை உதிவிடப் பிரதிநிதி டபிள்யூ. டி. கிளாரன்ஸ் கடந்த சனிக்கிழமை மடுவுக்குச் சென்றிருந்தார்

திரு. கிளாரன்ஸ் அகதிகளின் நிலைப்பாட்டையும், அவர்களது கருத்துக்களையும் விவரமாக கேட்டறிந்து கொண்டார். அதேசமயம் படை அதிகாரிகளின் கருத்தையும் விசாரித்து அறிந்து கொண்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஒப்பந்தத்திலுள்ள 'காரத்தை' குறைக்க இந்தியா தயாராம்!

புதுடில்லி, மார்ச் 13

உத்தேச இலங்கை - இந்திய நட்புறவு உடன்படிக்கையில் இலங்கை தனக்குப் பாதகமாகக் கருதும் அம்சங்களின் 'காரத்தைக்' குறைக்கவும் தேவையானால் சிலவற்றை மாற்றி அமைக்கவும் இந்தியா தயாராக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலாளர் முஷ்குந்த் துபே புதுடில்லியில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் இத் தகவலை வெளியிட்டார்.

இலங்கை தயாரித்த உத்தேச நட்புறவு உடன்படிக்கைக்குப் பதிலாக இந்தியா சமர்ப்பித்த நகலில் பிரச்சினைக்குரிய பகுதிகள் இருப்பதாகவும் திரு. துபே ஒப்புக்கொண்டார்

நகல் பற்றி திறந்த மனதுடன் விவாதிக்க இந்தியா தயாராக உள்ளது என்றும் அவர் சொன்னார்.

''இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படும்போது கொழும்பு அரசுடன் பேசலாமா'' என்று சிலர் கேட்கின்றனர்.

''இவற்றுக்கு எல்லாம் காது கொடுத்து வெளியுறவுக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப... பின்ன காரத்தைக் கூட்டிக் குறைக்க உவை பலகார ஒப்பந்தமே செய்யினம்......?

## கடற்படையினர் தாக்குதல்; படகு எரிந்து நாசமானது

### மணற்காட்டில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

கடந்த திங்களன்று வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்பகுதியில் பொதுமக்கள் சென்ற படகு ஒன்று கடற்படையினரின் விசைப்படகு ஒன்றினால் தாக்கப்பட்டு எரிந்தது.

பொதுமக்கள் சென்ற படகில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது குறித்தோ அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்தோ விபரம் ஏதும் தெரியவரவில்லை.

## முஸ்லிம் ஊர்காவலரால் 14 தமிழர்கள் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 13

கடந்த ஞாயிறன்று திருகோணமலை மாவட்டம் தோப்பூரில் உள்ள முஸ்லிம் ஊர்காவல் படையினர் பள்ளிக் குடியிருப்புப் பகுதியில் 14 தமிழ் பொதுமக்களைக் கைது செய்தனர்.

அவர்களுக்கு என்ன நடந்தது என்று குறித்து தகவல் ஏதும் தெரியவரவில்லை. [உ]

## முல்லைத்தீவிலும் சூடு! இருவர் காயமுற்றனர்

முல்லைத்தீவுக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர் படகு ஒன்றின் மீது நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரான இ. சிறி [வயது 26-புதுக்குடியிருப்பு] என்பவர் நேற்று இரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். [ஓ-5]

## ரஞ்சனின் இடைவெளியை நிரப்ப முயற்சியாம்

கொழும்பு, மார்ச் 13

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் மறைவினால பாதுகாப்பு நடவடிக்கைகளில ஏற்பட்டுள்ள இடைவெளி எப்படி நிரப்பப்படும் என்பது பற்றி இன்னும் சில தினங்களில் தெரிவிப்பேன்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க கடந்த வாரம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

''ரஞ்சன் போன்று புதிய பாதுகாப்புத் துணை அமைச்சர் விஜேதுங்காவுக்கு பாதுகாப்புப் படையினருடன் நெருக்கமாகச் செயற்பட நேரமிருக்காதே'' — என்று செய்தியாளர்கள் கூறியதற்கு —

''ஆம். அந்த இடைவெளியை நிரப்பத்தான் வேண்டும். எப்படி நிரப்பப்படும் என்பதை சில தினங்களில் உங்களுக்குக் கூறுவேன்'' — என்று ஜெனரல் ரணதுங்க சொன்னார். [ஓ-எ]

## கொழும்பு வீதிகளில் வாகனங்களை நிறுத்துவது குறித்து எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 13

கொழும்பு நகரில் தற்காலிகமாக தங்கி நிற்போர் பற்றிய சகல விவரங்களையும் பொலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டும் என வீட்டுக்காரர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தற்காலிகமாகத் தங்கியவரின் பெயர், சொந்தவிலாசம் அடையாள அட்டை இலக்கம், தங்குவதற்கு வந்த [illegible] சகல விவரங்களையும் சகல தனியார் வீட்டுச் சொந்தக்காரர்களும் தமக்குத் தெரிவித்து உதவ வேண்டும் என்று பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அரசாங்கம் விடுத்த விசேட அறிவித்தல் ஒன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஹோட்டல்கள், விடுதிகள் லொட்ஜுகள் இத்தகவல்களை நாளாந்தம் தெரியப்படுத்த வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளன.

ஹோட்டல்கள், கடைத் தொகுதிகள் முன்னால் நிறுத்தப்படும் வாகனங்களை உலோகங்கள், வெடிமருந்துகள் பரிசோதிக்கும் கருவிகளைக் கொண்டு மட்டும் சோதனை நடத்தாது கைவிட்டும் சோதிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது

கொழும்பு வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களைச் சொந்தக்காரர்கள் சில நிமிடங்களில் அங்கிருந்து அகற்றி விட வேண்டும். இல்லையேல் பொலீஸார் அவற்றைப் பறிமுதல் செய்து சோதித்து

[4ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

42 வயதுடைய சைவ போசனமுடைய 18 வருடங்கள் சேவை புரிந்து ஆசிரியைக்கு அவரது சகோதரர் அரசாங்க உத்தியோகத்தில் உள்ள மணமகனைத் தேடுகிறார். தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் குறிப்புக்களுடன் விவரம் கண்ணைப் பிக்கவும். இல:- 192. C/O உதயன். [16093]

### வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள், கொப்பி, பேப்பர், போத்தல், பித்தளை, செம்பு சீமெந்து, கேழிதீன், வெற்றுப்பைகள் வாங்கப்படும். விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book House 57, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி, முரசொலிக்கு முன் லேன். யாழ்ப்பாணம் [16045]

### நோவு எண்ணெய்

ஒடகப்பலம் சமத்தர் நோவு எண்ணெய். எஸ் ரி. மெடிக்கல்ஸ், 490. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [14925]

### புளொக் புகைப்படம்

புளொக் [Block] புகைப்படம் - றபர்சீல் - கலர் படம் - ஓவியம்-பிறேம்போடுதல் - கலர் பிலிம் சுருள்கள்- ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள்! கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம்.

[சி-5814]

### ரைப்ரைட்டர்கள்

Typewriters:- தமிழ் - ஆங்கிலம் வாங்கவும். விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித தட்டச்சு இயந்திரங்கள், உதிரிப் பாகங்களுக்கும் FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக)

[சி 5835]

### வரலாறு 10

வரலாறு குறிப்புக்கள் ஆண்டு 10 விற்பனையாகிறது. படத்திட்டத்திற்கமைய 60 குறிப்புக்கள். ஆக்கம் நா. மயில்வாகனம் பரிபோவான் கலூரி, தொடர்பு: 36, வைமன் வீதி நல்லூர். [16103]

---

P TRICIAN INSTITUTES

## தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

1. Computer Programming in Basic Language and disk Operating system [3 Months]
2. City and Guilds of London Institute Quantity Surveying part I [6 Months]
3. Draughtsman ship - கட்டடப்படம் வரைதல்- [6 Months]
4. Short Hand and Typing தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் [6 Months]
5. Motor Mechanism - மோட்டார் மெக்கனிசம் [6 Months]
6. Motor Winding- மோட்டர் வைண்டிங் [4 Months]
7. Electrical Wiring- மின்சார இணைப்பு [3 Months]

மேற்படி பயிற்சி நெறிகள் எதிர்வரும் 20 - 03 - 1991 புதன்கிழமை காலை 9 00 மணிக்கு ஆரம்பமாகும்

மேலதிக விவரங்கட்கு:

**பற்றீஷியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,**
59, சென் பற்றிக்ஸ வீதி, யாழ்ப்பாணம்

**Patrician Institute of Higher Studies**
59, St. Patrick's Road, Jaffna.

(C/5840)

---

## மரண அறிவித்தல்

### வைத்தியநாதர் கணபதிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கரம்பனது ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகக் கொண்டவருமான வைத்தியநாதர் கணபதிப்பிள்ளை 11 - 3 - 91 இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புக் கணவரும், திருமதி கனகம்மா பசுபதி [பங்காளர்- ஆரம்பசுகாதார அலுவலர்], முத்துப்பிள்ளை, லட்சுமி, நடேசுபிள்ளை ஆகியோரின் அருமைத் தந்தையும், திரு தியாகராசா [இளைப்பாறிய நல அளவை ஊழியர்], திருமதி ப. சகலை, திரு. வ கந்தையா [இளைப்பாறிய காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்] கரு ஐ தியாகராசா திருமதி ந சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 3 - 91 இல் நடைபெற்றது இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. பசுபதி.

ஸ்கந்தபுரம் [16101]

---

# கிளிநொச்சியில் நெல்விலை வீழ்ச்சி

கிளிநொச்சி மார்ச் 13

கிளிநொச்சிப் பகுதியில் காலபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளதைத் தொடர்ந்து நெல், அரிசி போன்றவற்றின் விலைகள் பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளன

இதுவரை 1,000 ரூபா ஆக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு மூடை நெல்லின் விலை தற்போது 700ரூபா ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது

நல்ல ரக குத்தரிசியின் விலை 32 ரூபாவில் இருந்து 25 ரூபா ஆக குறைந்துள்ளது.

நெல் அறுவடை உச்சக்கட்டத்தை அடையும் போது அரிசி, நெல் ஆகியவற்றின் விலைகள் மேலும் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. [இ-76]

## பெண் காயம்

தென்மராட்சி, மார்ச் 13

வேகமாக வந்த பஸ் மோதியதால் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் சேறீவு துறைமுகத்தில் இடம்பெற்றது.

முள்ளிபவளையைச் சேர்ந்த பாலசு பிரமணியம் சின்னத்தங்கம் [வயது 53] என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்பு யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு இவர் கொண்டு செல்லப்பட்டார் [இ-117]

## வேலணையில் சுகாதார தொண்டர்பயிற்சி

அலைகலைதீவு, மார்ச் 13

சுகாதாரத் தொண்டர்களுக்கான இருநாள் பயிற்சி வகுப்பு வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

போறூட் நிறுவனமும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரும் இணைந்து இப் பயிற்சி வகுப்பை ஒழுங்கு செய்தன.

ஆதி முகாம் சுகாதாரம், தொற்றாத நோய்கள், நெருப்புக்காய்ச்சல், விசர் நாய்க்கடி கற்பகாலப் பராமரிப்பு சம்பந்தமாக பயிற்சி அளிக்கப்பட்டது. [இ - 18]

## லெப். வீராவுக்கு மக்கள் அஞ்சலி

சாவகச்சேரி, மார்ச் 13

மாவிட்டபுரத்தில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த லெப். வீரா [தம்பிமுத்து-ஏறவூர்] வின் புகழுடம்பு மட்டுவில் சந்திரபுரம் சாந்தநாயகி வித்தியாலயத்தில் ஞாயிறன்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. [இ 31]

## இப்படியும் கட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் கல்விப் பகுதியில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. எதற்கு?

பத்திரிகைகளுக்கு செய்தி கொடுப்பதற்கு!

சமது அனுமதியின்றி, பதவிநிலை உத்தியோகத்தர் எவரும் பத்திரிகைகளுக்கோ அல்லது வேறு பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கோ செய்திகள் வழங்கக்கூடாது என்று யாழ்.பிரதேசக்கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் சுற்றுநிருபம் மூலம் அறிவித்திருக்கிறார்.

காரணம் என்னவென்று தெரிவிக்கப்படவில்லை. அவர் பத்திரிகைகளுக்கு பயப்படுகிறாரா அல்லது தமது அதிகாரிகளில் நம்பிக்கை இழந்துவிட்டாரா என்பது தெரியவில்லை.

நிர்வாகம் பரவலாக்கப்படுவது பற்றி இப்போது எல்லா மட்டங்களிலும் பேசப்படுகிறது ஆனால் எங்கள் அலுவலகத்தில் அதிகாரம் ஒரே இடத்தில் குவிக்கப்படுகிறதே என்று அங்கு பணியும் ... தவில்லை தெரிவித்தார். [இ]

## கோயில்களை அண்டி பதுங்குகுழி

கொக்குவில், மார்ச் 13

கோயில்களை அண்டிய பகுதிகளிலும், தற்போது பொது பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கோவில் பகுதிகளில் தற்போது அடிக்கடி குண்டு வீச்சுக்கள் இடம்பெறுவதே இதற்குக் காரணம் ஆகும்.

பொற்பதி விநாயகர் ஆலயம், கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலயம், வைரவர் ஆலயம் கொக்குவில் கிழக்கு தலையாளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் ஆகியவை கடந்த இரு மாதங்களில் சேதமடைந்த கோயில்கள் ஆகும். [இ-69]

### விலை வீழ்ச்சி

கொக்குவில், மார்ச் 13

திருநெல்வேலிப் பகுதியில் சில கடைகளில் சீனி கிலோ 37 ரூபாவாகவும், மா கிலோ 26 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. தேங்காய் விலையும் பெரும் அளவு குறைந்துள்ளது. [இ-69]

## குர்டிஷ் போராளிகளுடன் துருக்கி அரசு தொடர்பு

அங்காரா, மார்ச் 13

ஈராக்கில் உள்ள குர்டிஷ் இனப் போராளிக் குழுத் தலைவர்களுடன் முதல்தடவையாக துருக்கி அரசு நேற்று பேச்சுக்களை நடத்தியது.

ஈராக்கின் எல்லைப்புற நாடாக துருக்கி இருந்து வருகிறது. துருக்கியை எல்லையாகக் கொண்ட ஈராக்கிய பகுதியில் தனி இனமாக குர்டிஷ் இன மக்கள் வசித்து வருகின்றனர்.

குர்டிஷ் இனமக்கள் தனிநாடு கோரி நடத்திவரும் போராட்டத்துக்கு துருக்கி இதுவரை ஆதரவளிக்காது ஈராக்குடனான நல்லுறவை பேணி வந்தது.

வளைகுடாப் போரின் பின்னர் துருக்கி குர்டிஷ் இன போராளிகளின் போராட்டம் தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விட்டது

குர்டிஷ் இன போராளிகள் தங்கள் பிரதேசத்தின் பெரும் பகுதியை சதாம் ஆதரவு படையினரிடமிருந்து கைப்பற்றியுள்ள இத்தருணத்தில், துருக்கி குர்டிஷ் போராளிகளின் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கதாக் கருதப்படுகிறது. [இ - எ]

## இஸ்ரவேல் விட்டுக்கொடுக்க வேண்டும் என்கிறது அமெரிக்கா

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இஸ்ரவேல் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் இதனை ஜெரூசலத்தில் வெளியிட்டார்

முன்னர் இஸ்ரவேலிப் பிரதமர் மற்றும் உயர்தலைவர்களுடன் திரு பேக்கர் பலஸ்தீனப்பிரச்சினை குறித்து பேசினார்.

---

## விசேட அறிவித்தல்

வெளிவாரி பட்டமானிப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள்

மீண்டும் ஆரம்பம்: 16 - 03 - 1991

**G.A.Q.** (92 Apr.) — **B.A.** (91 Dec.)

## அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101,10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகாமையில்)

[சி-5838]

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**92** SAT. & SUN. கலை, வர்த்தக வகுப்புக்கள்

பிரிவு 2 ஆரம்பமாகிவிட்டது
நேரம் - 10 00 மணி

மு. குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
2. குறிப்பிட்ட மாணவர்களுக்கே அனுமதிகள் வழங்கப்படும.
3. 91 அண்டிற்கான Day Classes பிரிவு - 2 ஆரம்பமாகவுள்ளது.

[சி-5839]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தீர்வு வர.....!

வடக்கு-கிழக்கு யுத்தத்திற்குத் தீர்வு காணும் காலம் நெருங்கிவிட்டதாக புதிய பாதுகாப்புத் துணை அமைச்சர் திரு. டி. பி. விஜேதுங்க தெரிவித்திருக்கிறார். அவர் இவ்வாறு தெரிவித்திருப்பது யுத்தத்தை நிறுத்துவதற்கு அரசு விரும்புகிறதா அல்லது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையும் விரும்புகிறதா என்பதைத் தெளிவாக்கவில்லை.

எனினும் கடும்போக்காளரும், இராணுவத் தீர்வில் அதிக நம்பிக்கை வைத்திருந்தவருமான அமைச்சர் ரஞ்சனின் மரணத்தின் பின்னர் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இல்லாவிடினும் யுத்தத்தைத் தொடர்வது சம்பந்தமாகவேனும் அரசிடம் ஒரு மாற்றம் உண்டாகி இருப்பதாக அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஒரு சிறிய நாடு, வறிய நாடு, மதத்துக்காக, வருடக் கணக்காக போருக்காகக் கோடி கோடியாக, கனை கனையாகச் செலவு செய்து கொண்டிருக்க முடியாது. இது ஆளும் கட்டிலில் இருப்போருக்கு உள்ளூரத் தெரியாததொன்றல்ல.

தமிழர்களிடம் தோற்றதாக இருக்கக்கூடாது. அவர்கள் ஏதோ ஒரு வகையில் பலசாலிகள் என்ற நிலை உண்டாகிவிட்டால் அற்ப சலுகைகளைக் கொடுத்து அவர்களை அடிமைகளாக வைத்திருக்க முடியாது என்ற வக்கிர எண்ணமும், வரட்டுக் கௌரவமும் போரைத் தொடர வேண்டும் என அரசினரை உந்திக் கொண்டிருக்கிறது.

எனினும் போர் நீண்டு கொண்டு போகப் போக, இராணுவ மேலாண்மையும், மேலாதிக்கமும் சனநாயகத்தை அமுக்கி நசுக்கிவிடும் என்ற அரசியல் நடைமுறைத் தத்துவத்தை ஆளும் தரப்பினர் மெதுமெதுவாக உணரத் தொடங்கி விட்டனர் போலத் தெரிகிறது.

எனவே ரஞ்சனின் மரணத்தை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்து போரை நிறுத்தியாக வேண்டும் என்று அரச தரப்பினர் இறங்கி வர மனம் விரும்புவதாகவே அண்மைய போக்குப் புலப்படுகின்றது. இந்த நாட்டை புதிய கைத்தொழில் தேசமாக்கும் (என். ஐ. சி.) இலக்கு. புதிய தலைமைத்துவத்தின் அடிப்படைக் கொள்கைக்கு அது குந்தகம் விளைவிக்கும் என்பதை உணர்ந்தார்களோ என்னவோ...!

எனினும் தமிழர் பிரச்சினையை நிரந்தரமாகவும், நியாயமாகவும் தீர்க்க வேண்டும் என்பதில் ஆளும் தரப்பினருக்கு மனமார்ந்த அக்கறை உண்டா என்பது சந்தேகமே.

தமிழர்களின் சுயாட்சி அபிலாசையையும், சுய நிர்ணய உரிமையையும் தவிர்த்து இப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பது இயலாத காரியம். இதனை அரசு இன்னும் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.

அரசாங்கம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாக இருந்தால், தனது சொந்தத் தீர்வு, திட்டத்தை முன்வைக்க வேண்டும். அவ்வாறு செய்யாத வரை அரசு ஒரு தலைப்பட்சமாகப் போரை நிறுத்தினாலும் கூட, இனப் பிரச்சினைக்குத் தீர்வு வரப்போவதில்லை. இழுபட்டுக் கொண்டே செல்லும். நாடும் நிம்மதியில்லாமல் எல்லா வகைகளிலும் நாசமாக வேண்டியது தான்!

# மத்திய கிழக்கு திரும்புவோருக்கு

# இலவச விமானச்சேவை

கொழும்பு, மார்ச் 13

மத்திய கிழக்கு நாடுகளுக்குத் திரும்பிச் சென்று மீண்டும் தொழில் செய்ய விரும்பும் இலங்கையருக்கு, இலவச விமானப் பயணங்களை ஒழுங்கு செய்து கொடுக்க வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான சர்வதேச நிறுவனம் முன்வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வளைகுடாப் போரின் போது, பாதுகாப்புக் கருதி இலங்கை திரும்பியவர்களுக்கே இந்த வசதி செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம் குவைத்தில் உள்ள நிலைபற்றி ஆய்வதற்காக கொழும்பு தொழில் அமைச்சு அதிகாரிகள் குழு ஒன்று சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளது.

குவைத்தில் மீண்டும் இலங்கைத் தூதரகத்தை திறக்க இந்தக் குழு நடவடிக்கை எடுக்கும்.

வளைகுடாப் போரின் போது, குவைத்தில் தங்கி இருந்த ஆயிரக்கணக்கான இலங்கையரின் நிலை பற்றி இக்குழு கண்டறிய உள்ளது.

(இ எ)

# சீமெந்து ஊழியருக்கு நிலுவை கிடைக்குமா?

யாழ்ப்பாணம், மார்ச் 13

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை மூன்றாம் திட்டப்பகுதியில், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், வேலை வங்கி என்பன மூலம் நியமனம் பெற்றவர்களுக்கு சம்பள நிர்ணய சபையின் சம்பளத் திட்டப்படி முந்திய நிலுவை கிடைக்குமா?

இது குறித்து நாடாளுமன்றப் பொதுமனுக் குழுவுக்குச் செய்யப்பட்ட மனுவைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களின் நியமனக் கடிதங்களின் பிரதிகள் கோரப்பட்டுள்ளன.

தென்னிலங்கையின் முன்னாள் எம். பி. ஒருவர் மூலம் கடந்த ஜூன் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவுக்கு இப்போதுதான் பதில் கிடைத்திருக்கிறது.

மனுவில் முதல் ஒப்பமிட்ட மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கம் மூலம் நியமனம் பெற்றவருக்குக் கிடைத்துள்ள பதிலில்—

அதில் கோரப்பட்ட நிலுவை குறித்துப் பரிசீலனை செய்யும் பொருட்டு, எல்லோரினதும் நியமனப் பத்திரங்களையும் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## புகழுடம்புகள் தகனம்

தென்மராட்சி, மார்ச் 13

கடந்த 7 ஆம் திகதி பலாலி இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த காரைநகர் சிங்கம் (இயக்கச்சி), மௌலி (வெல்லாவெளி) ஆகிய இரு போராளிகளின் புகழுடம்புகள் பளை, கொடிகாமம் சந்தைகளில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெற்றன.

புகழுடம்புகள் இராணுவ மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

(இ-117)

## நூல்கள் தந்துதவ கோரிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 13

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் நூல் நிலையம் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது.

அரசியல், பொருளாதாரம், சமூக இலக்கியம் தொடர்பான நூல்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் தந்து உதவுமாறு யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

(இ)

## இளைஞர் கைது

கொழும்பு, மார்ச் 13

போலிப் பாஸ்போர்ட்டுகளுடன் டென்மார்க் செல்ல முயன்றதாகக் கூறப்படும் ஆறு வடபகுதித் தமிழ் இளைஞர்களை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

# சீருடை வழங்கப்படவில்லை சாதாரண உடையில் ஊழியர்

தென்மராட்சி, மார்ச் 13

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த வருடத்துக்கான சீருடைகள் இன்னும் வழங்கப்படவில்லையாம்.

வைத்தியசாலை ஊழியர்கள் பலர் சாதாரண உடையில் வருகிறார்கள் என்றும்— ஊழியர்களை அடையாளம் காண முடிவதில்லை என்றும் நோயாளர் தெரிவிக்கின்றனர்.

(இ-117)

# வல்வையை அழித்த அரசினால் எதனையும் சாதிக்க முடிந்ததா?

(நேற்றைய தொடர்ச்சி)

மகிழ்ச்சியுடன் திரும்பிக் கொண்டிருந்த எனக்கு, வழியில் வந்து கொண்டிருந்த சதாசிவம் ஆர சலட்சுமி அம்மாளின் கலகலப்பான குரல் ஏதோ ஒரு உற்சாகத்தைக் கொடுத்தது போல இருந்தது...

"என்ன?...எங்கை போட்டு வாறியள்?" என்று கேட்டுக் கொண்டே, அவரது கையைப் பிடித்துச் சுகம் விசாரித்தேன்.

"சுடமா உடைஞ்ச வீடுகளைப் பார்த்துக் கொண்டு வாறன்... இண்டைக்கு உடைஞ்ச வீடுகளைத் திருத்துகிறது சரி, நாளைக்கு வெளிநாடுகளிலை இருக்கிற இவையின்ரை சொந்தக்காரர் கோடி கோடியா அனுப்பப் போகினம்... இந்தக் காசுகளைச் சேர்த்து முன்னுக்கே எங்கடை புலிகளுக்கு அனுப்பியிருந்தால் அவங்கள் பிளேன் சுடுகிற பெரிய ஆயுதங்களை எல்லாம் வாங்கியிருப்பாங்கள்... அதுக்கு எங்கடை சனத்துக்கு மனம் வராது"

அவரின் அர்த்தமுள்ள அந்த வார்த்தைகளின் நோக்கம் எனக்கும் ஓர் உண்மையை உணர்த்தியது.

ஆம்!... புதிது புதிதாக நாங்கள் வீடுகளைக் கட்டி அழகு பார்க்கின்றதைவிட, எங்களைக் கொல்லவும், எங்கள் உடைமைகளை அழிக்கவும் பயன்படுத்தும் ஸ்ரீலங்கா பேர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் அளவுக்கு நாங்கள் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்தியிருந்தால், எங்கள் நகரங்களை அரச படையினர் இப்படி அழித்துக் கொண்டிருப்பார்களா?

எதனைச் சாதித்தார்கள்

மன்னர் நாட்டைஎறத்தல 229 குண்டுகளையும் வீசி வல்வெட்டித்துறையில குறைந்தது 5,000 மக்களையாவது கொன்று ஒழித்துவிடவேண்டும் என்று நிலைப்பாட்டை [illegible] தப் பேரினவாத [illegible] கோடிக்கணக்கான ரூபாவைக் கொட்டித் தனது வான்படைகளை ஏவிச் சாதித்தது என்ன?

திரு க. சண்முகசுந்தரம் தலைமையிலான நிவாரணக் குழுவும், நிழல் நிர்வாகமும் சேர்ந்து திரட்டிய தகவல்கள் அதற்கு விடையாக அமைந்தன.

நான்கு பாடசாலைகள், ஒரு தனியார் கல்வி நிலையம், ஆறு ஆலயங்கள், ஒரு கிறிஸ்தவ தேவாலயம், 419 வீடுகள் முற்றாகவும், 790 வீடுகள் பகுதியாகவும் சேதமாக்கப்பட்டன. 50 வர்த்தக நிலையங்கள், 51 வயல்கள், நூற்றுக்கணக்கான வலைகள் கூட சேதமாக்கப்பட்டன. பத்து அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று பலரைப் படுகாயப்படுத்தி, பத்துக் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை அழித்து 8,000 மக்களை அகதிகளாக்கினார்கள். தவிர வேறு

வல்லையப் புயல் இறுதிப் பகுதி

எதனைச் சாதித்துவிட்டார்கள்!

இத்தனைக்கும் ஸ்ரீலங்கா விமானப் படையினர் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்திய பிரதேசங்களில தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம்களோ, அல்லது ஆயுதக் களஞ்சியங்களோ இல்லை. என்பது மட்டும உண்மையாக இருக்கும் பொழுது—

"வல்வெட்டித்துறையில் புலிகளின் முகாம்கள் மட்டும நிர்மூலமாக்கப்பட்டன. சாதாரண பொதுமக்களின் குடியிருப்புகள் மீதோ, பாடசாலைகள் மீதோ, இந்து ஆலயங்கள் மீதோ எமது படையினர் குண்டுத் தாக்குதலை நடத்தவில்லை.

என்று ஜனவரி 24 ஆம் திகதி கொழும்பில் நடை [illegible] துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா அப்பட்டமான பொய்யை அவிழ்த்து விட்டார்.

### சுவீடிஷ் பேராசிரியர்

ஆனால், அண்மையில் யாழ்ப்பாணம் வந்த சுவீடிஷ் பேராசிரியர் பீற்றர் ஷால்க, ஸ்ரீலங்கா அரசின் புயல் வேகத் தாக்குதலில் அழிந்த வல்வெட்டித்துறை நகரைப் பார்வையிட்டு அதிர்ச்சி அடைந்தார்.

அவர் மிகத் தொலைவில் எங்கோ உள்ள விடுதலைப் புலிகள் முகாமையும் சென்று பார்வையிட்டார். அந்த முகாம் மீது எவ்வித குண்டுத் தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லை.

அந்த முகாம் வாசலில் நின்ற ஒரு போராளியிடம், சென்று—

'உங்கள் முகாம் மீது தாக்குதல் நடத்தப்படவில்லையா?' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

'சீ... அவங்கள், எங்கடை முகாம மீது குண்டுகளைப் போடவில்லை தற்செயலாகப் பதிய வந்தால், நாங்கள் சுட்டதும் இந்தப் பக்கமே விமானங்கள் வராது...' அந்தப் போராளி சிரித்துக் கொண்டே சொன்னதும் பேராசிரியர் பீற்றருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

'தனது சொந்தப் பிரசைகள் மீதே இப்படிக் குண்டுகளை வீசிக் கொன்றும், கட்டடங்களையும் இடித்தும் கொடுமைப்படுத்தும் ஒரு நாகரிகமற்ற அரசாங்கத்தை உலகின் எந்த ஒரு நாட்டிலும் நான் பார்க்கவில்லை...'

தனது எரிச்சலையும், கோபத்தையும், வார்த்தைகளால் கொட்டித் தீர்த்த அந்தச் சுவீடன் பேராசிரியரின் கண்கள் கூட ஒரு சந்தர்ப்பத்தில் கலங்கிக் கொண்டு வந்தன!

'பௌத்த மதத்திற்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் உள்ள தொடர்பு' என்ற நூலை வெளியிட்டதன் மூலம், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீது செல்வாக்கையும், அதிகாரத்தையும் செலுத்தும் பௌத்தமத பீடாதிபதிகளின் போக்கைப் பற்றி அவர் அம்பலமாக்கி உள்ளார்.

உயரிய நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட பௌத்த மதக் கோட்பாடானது இன்று இலங்கையில் தொடர்ந்து ஆட்சிக்கு வரும் சிங்கள அரசாங்கங்களினால் அவமதிப்புக்குள்ளாகி வருவது, காலப்போக்கில் பௌத்த மத சிந்தனையின்மீது இருக்கும் நம்பிக்கையைச் சிதறடித்து விடும் என்பதை அவர்கள் எப்போது உணரப்போகிறார்கள்?

ஒரு தடவை தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், இந்தியாவில் இருந்து வெளிவரும் 'சண்டே' என்ற வார சஞ்சிகைக்குப் பேட்டி அளிக்கையில்,

ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா உண்மையான ஒரு பௌத்தராக இருந்திருந்தால், நான் ஆயுதம் ஏந்த வேண்டிய ஒரு சூழ்நிலையே ஏற்பட்டிருக்க முடியாது' என்று குறிப்பிட்டிருந்தார்!

அந்தத் தீர்க்க தரிசனமுள்ள ஒரு தலைவனின் கூற்று அன்று நடைபெறும் நிகழ்வுகளின் ஒரு காலக் கண்ணாடி!

புத்த தர்மத்தைப்பற்றி உலக அளவில் பரந்த பிரசாரம் செய்யும் ஸ்ரீலங்கா அரசு, இங்கே எமது மண்ணில் காலங்காலமாக மத கலாசாரத்திலும், ஒழுக்க நெறிகளிலும் நம்பிக்கை வைத்துள்ள எமது மக்களைக் கொன்று குவிக்கின்றது!

எமது இந்துக் கோயில்கள் மீதும், கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் குண்டுகளை வீசி நிர்மூலமாக்கின்றது! ஆனால் ஒரு மதத்தின் பெயரால் ஒரு சிறுபான்மை இனம் அடக்கி ஒடுக்கப்படும் பொழுது நாளை அத்தகைய அரசுகள் நிர்மூலமாக்கப்பட்டு விடும் என்பது வரலாறு காட்டும் உண்மை!

(முற்றும்)

வல்வை
ந. அனந்தராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பகுதியில் காய்ச்சல் பரவுகிறது

## தினமும் 500 பேருக்குச் சிகிச்சை

தென்மராட்சி, மார்ச் 13

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளிப் பகுதிகளில் ஒருவித காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாக அறிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது ஆஸ்பத்திரிகளின் பதிவேடுகளில் இருந்து தெரியவருகிறது.

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி ஆஸ்பத்திரிகளில் தினமும் ஐந்நூறுக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ஓ-117]

# ஸ்ரீலங்கா பெண் சிப்பாய்கள் தமிழ் பேசுவார்களாம்!

கொழும்பு, மார்ச் 13

ஸ்ரீலங்கா இராணுவத்தின் முதலாவது மகளிர் தேசிய காவற்படையில் சேர்க்கப்பட்டுள்ள பெண்கள் எல்லோரும் சரளமாகத் தமிழ் பேசுவார்களாம்!

வவுனியா தச்சன் குளம் இராணுவ முகாமில் பயிற்சி பெற்று வந்த இப்பெண்களுக்கு அதிரடித் தாக்குதல் உட்பட சகல இராணுவப் பயிற்சிகளும் வழங்கப்பட்டிருக்கின்றனவாம்!

—இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்றது. பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்தப் பெண் சிப்பாய்கள் தமிழ்ப் பகுதிகளிலேயே பணியில் ஈடுபடுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாப் பகுதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மகாவித்தியாலய ஆசிரியை ஸ்ரீமாலினி, அவரது கணவர் ஸ்ரீபத்மநாதன் [வயது 35] ஆகியோரும், ஸ்ரீமாலினியின் தாயாரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

மீண்டும் காலை 9 30 மணியளவில் இதே இடத்தில் நடந்த பொம்மர் தாக்குதலில் சந்திரகுமார் [வயது 14-முல்லைத்தீவு கட்டுக்கரை ஓரம்], சௌந்தரநாயகம் [வயது 50-மரக்காரம் பளை] ஆகியோர் படுகாயமடைந்தனர்.

நண்பகல் 11 மணியளவில் கிடாச்சூரி என்னுமிடத்தில் நடந்த பொம்மர் தாக்குதலில் கலாநிதி [வயது 20], செல்வநாயகி [வயது 30] ஆகிய இருவர் படுகாயமடைந்தனர்.

இவ்விரு இடங்களிலும் சில வீடுகளும் சேதமடைந்தன. 15 இற்கும் அதிகமான தென்னைகளும் முறிந்தன. [உ-5]

## மடு அகதி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டார்.

அதன் பின்னர் திரு. கிளாரன்ஸ் கொழும்பு திரும்பி, ஜெனிவா தலைமையகத்துக்கு விபரமான அறிக்கை ஒன்றை அனுப்பி இருந்தார்.

உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டமை, மடு முகாம் மூடப்படமாட்டாது என்பதற்கு ஓர் அறிகுறி என்று விஷயமறிந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. [ஓ-3]

## மூவர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லில் மூன்று பொது மக்கள் காயமடைந்தனர்.

ஆ. கந்தையா [வயது 59], ஸ்ரீஸ்காந்தராணி [வயது 23], இ பிரியா [வயது 2] ஆகியோரே காயமுற்றனர். [உ]

## ஒப்பந்தத்...

கொள்கையை நடத்தினால் இருதரப்பு உறவுகள் மோசமாகுவதில் தான் முடிவடையும்'' — என்றும் திரு துபே சொன்னார். [ஓ-எ]

## ப. நோ. கூ. சங்கங்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டுள்ள பொருள்களும், அவற்றின் புதிய விலைகளும் வருமாறு:-

| பொருள்கள் | விலை [ஒரு கிலோ] |
|---|---|
| வெ. பச்சை அரிசி | — 26-00 |
| சீனி | — 34-00 |
| மா | — 25-00 |
| பிஸ்கட் [மாரி] | — 70-00 |
| சர்க்கரை | — 33-50 |
| கோறா அரிசி | — 26-00 |
| சோயா [பைக்கட்] | — 13-50 |
| சைக்கிள் டயர் | — 95-00 |
| சைக்கிள் டியூப் | — 40-00 |

[ஓ-3]


## தேவை

வெள்ளிரும்பு [Stainless Steel] தகடுகள் அரை நூல், 1 நூல், கால் இஞ்சி வைத்திருப்பவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள். நல்ல நிலையிலுள்ள பழைய தாங்கிகள் கூட கொள்வனவு செய்யப்படும். நல்ல விலை தரப்படும்

இ. ஞானசிவம்,
உடையார் செல்லத்துரை வளவு,
சைவப் பாடசாலை ஒழுங்கை.
திருநெல்வேலி. [15906]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மகாபொல 3,500 பேருக்கு

கொழும்பு, மார்ச் 13

மகாபொல புலமைப் பரிசில் பெறுவதற்கு இந்த வருடம் 3 ஆயிரத்து 500 பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு இது குறித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது. [ஓ-3]

# ரூ. 4 ஆயிரம் நிவாரணம்

பருத்தித்துறை, மார்ச் 13

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையில் எதிர்வரும் சனிக்கிழமை உற்பத்தித் திறன் முயற்சி நன்கொடை நிவாரணப் பணம் [ரூ 4 ஆயிரம்] வழங்கப்பட உள்ளது.

நிவாரணம் வழங்கப்படவுள்ள கி. சே. பிரிவுகளும், குடும்பங்களின் எண்ணிக்கையும் வருமாறு:

★ புலோலி தெற்கு - 213
★ பொலிகண்டி கிழக்கு —393
★ பொலிகண்டி மேற்கு —188

[ஓ-118]

# பரு. வங்கியில் ரூ. 2 ஆயிரம் பணம்

பருத்தித்துறை, மார்ச் 13

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை தமது வாடிக்கையாளர்களுக்கு நேற்று முதல் இரண்டாயிரம் ரூபா வரையான கொடுப்பனவுகளை பணமாக வழங்கி வருகிறது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை இது நடைமுறையில் இருக்கும் எனவும்—நூறு வாடிக்கையாளருக்கு பணம் வழங்கப்படும் எனவும் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-118]

# நாளை நடக்கும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

பத்திரிகைக் கலைச் சான்றிதழ் பாடநெறி பற்றிய அறிமுகக் கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில் பிறவுன் வீதியிலுள்ள திறந்த பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெற உள்ளது [ஓ]

# ஜனதா தள் தனியாகவே போட்டியிடும்

புதுடில்லி, மார்ச் 13

ஜனதா தள் [வி. பி. சிங்] கட்சி பொதுத் தேர்தலில் தனித்தே போட்டியிடும்.

கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான முன்னாள் மத்திய அமைச்சர் முகமட் ஆரிப்கான் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஜனதா தள் கட்சியின் ஒரே தலைவர் வி. பி சிங் தான் என்றும் அவர் சொன்னார். [ஓ-எ]

# பண்டிதமணி நினைவு தினம்

யாழ்ப்பாணம் மார்ச் 13

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் ஐந்தாவது நினைவு தினம் இன்றாகும்.

தமிழுக்கும், சைவத்துக்கும் பெருந் தொண்டாற்றிய பண்டிதமணி தமிழ் பரப்பும் தமிழ் ஆசிரியர் பரம்பரைகள் பலவற்றை உருவாக்கிய பெருமைக்கும் உரியவர் ஆவார்.

தமிழ் இலக்கண, இலக்கியங்களில் பெரும் விற்பன்னரான பண்டிதமணி, சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமாவர். தள்ளாத வயதிலும் தமிழ்ப்பணி செய்து அதன் வளர்ச்சிக்கு உழைத்தவர். [அ]

# தேவிலால் பேச்சால் நாடாளுமன்றில் குழப்பம்

புதுடில்லி, மார்ச் 13

இப்போதைக்கு நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வேண்டாம் என்று துணைப் பிரதமர் தேவிலால் நேற்று லோகசபையில் பேசி ஒரு சிறு குழப்பத்தை ஏற்படுத்தினார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சியின் ஆட்சியை நீடிக்க உதவும்படியும் தேவிலால் உறுப்பினர்களிடம் அப்போது கோரிக்கை விடுத்தார்.

நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு பார்த்தால் ஜனாதிபதி தேர்தலுக்கு உத்தர விடமாட்டார் என்றும்—பொதுத்தேர்தலை நடத்துவதற்கு ஆயிரத்து 500 கோடி ரூபா செலவாகும் என்றும்—

இதனை நாடு தாங்காது என்றும் திரு. தேவிலால் கூறினார்,

தேவிலாலின் இப்பேச்சு, ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சித் தலைமைப் பீடத்தில் பலத்த கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதைக் வெளிப்படுத்துவதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

தேவிலாலின் துணையோடு புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க இந்திரா காங்கிரஸ் முயற்சித்து வருவதாகவும் இன்னொரு செய்தி தெரிவித்தது. [உ எ]

# எந்நேரமும் நாடாளுமன்று கலைக்கப்படும் நிலை!

புதுடில்லி, மார்ச் 13

நாடாளுமன்றம் ஓரிரு மணித்தியாலங்களில் அல்லது ஓரிரு நாட்களில் கலைக்கப்படலாம்.

பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் எல். கே. அத்வாணி இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார். [உ-எ]

# ராஜ்ய சபையில் சச்சரவு

புதுடில்லி, மார்ச் 13

நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிடுவதில் காலதாமதம் காட்டுவதற்காக ஜனாதிபதி வெங்கடராமனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படவேண்டும் என்று தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அபிப்பிராயம் தெரிவித்திருந்தார் அல்லவா?

இந்தக் கருத்துத் தொடர்பாக ராஜ்யசபையில் நேற்று இந்திரா காங்கிரஸ் மற்றும் அ. தி மு. கவைச் சேர்ந்த எம். பிக்கள் ஓர் அணியாகவும், தி மு கவைச் சேர்ந்த எம். பிக்கள் ஓர் அணியாகவும் நின்று கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் எம். பிக்களான ஜெயந்தி நடராஜனும் வி. நாராயணசாமியும் திரு. கருணாநிதியைத் தாக்கி பேச ஆரம்பித்ததும்—கடும் வாக்குவாதம் இரு தரப்பாருக்கும் இடையில் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில்—தி. மு. க. எம். பியான டி. ஆர். பாலு தலைமையில் ஏனைய தி. மு. க. எம். பிக்கள் சபையின் மையப் பகுதிக்குச் சென்று ஏதோ கூறினர்.

உயர்ந்த பதவியில் இருக்கும் ஜனாதிபதி பற்றி தெரிவிக்கும் கருத்துகளை பதிவேட்டில் பதிவுசெய்ய முடியாது என்று சபை உபதலைவர் கூறினார்.

அதனைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகளை உபதலைவர் பதினைந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார். [ஓ-எ]

# விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மார்ச் 13

இலங்கை தொழில்நுட்ப கல்விச்சேவை 2 ஆம் தரம், 3 ஆம் தரம் ஆகியவற்றுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதிபர், துணை அதிபர் போன்ற பதவிகளுக்கே பெப்ரவரி 22 ஆம் திகதிய வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 22 ஆம் திகதி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ 3]

## கொழும்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எடுத்துச் செல்வர் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா குண்டுவெடிப்பில் கொலையுண்ட சம்பவத்தைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [அ]


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து மருதலிங்கம்

[சமாதான நீதவான், திடீர்மரண விசாரணை அதிகாரி - சுன்னாகம்]

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த திரு. ச. மருதலிங்கம் அவர்கள் நேற்று [12-3-1991] காலமானார்,

அன்னார் சின்னத்தங்கச்சி [ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை] அவர்களின் அன்புக் கணவரும், யசோதா [ஆசிரிய மாணவி பலாலி ஆசிரிய கலாசாலை], கிரிதரன் [கனடா], பிருந்தா, மீரா ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமத்தம்பி [பிரதம கணக்காளர், சிலோன் அசோசியேட்ஸ் மோட்டோர்ஸ், கொழும்பு], தங்கரத்தினம், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகராசா, தங்கவேலு [இலங்கை புகையிரதப் பகுதி], மகாதேவன் [ஜேர்மனி], இராசு [கனடா], திருமதி இராசமுத்து கதிரவேலு [தாதி, அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை], விஜயலட்சுமி, காலஞ்சென்ற குமாரசாமி, பரராசசிங்கம் [சீநோர், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 13 - 3 - 91 பிற்பகல் 2 மணிக்கு அச்சுவேலியில் நடைபெறும். உறவினரும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி ம. யசோதா (மகள்)

அல்பேட் வீதி,
அச்சுவேலி தெற்கு. [15907]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org